பதிவு எண்: M. 6311 ☆ தொலைபேசி: 51331 ☆ நிறுவியது: 1953 ☆ விலை 7 காசு ☆ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன்

மலர் : 20] சென்னை : கார்த்திகை 2 (17-11-72) வெள்ளி வெளியூர் : கார்த்திகை 3 (18-11-72) சனி [இதழ் : 128

9 மாத காலத்தில் ரூ. 5.26 கோடி செ[லவு]

புதுடில்லி, நவ. 1[7]—

"இந்தியாவில் காவலில் வைக்க[ப்]பட்டுள்ள போர்க் கைதிகளுக்காகக் கடந்த செப்டம்பர் முடிய உள்ள 9 மாத காலத்தில் ரூ. 5.26 கோடி செலவிருப்பட்டிருக்கிறது"

என்ற தகவலை நாடாளுமன்[றத்தில்] இராணுவ அமைச்[சர் ...] ராம் தெரிவி[த்தார்].

[...] தேசத்தில் சரணடைந்த பாகிஸ்தான் இராணுவத்தினர் 60,000 பேர் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

ஆச்சாரியாரின் அபத்தக் கூற்று

கழக ஆட்சிக்கு எதிராக நடைபெறும் சனநாயக விரோதச் செயல்கள்

தோழமைக் கட்சித் தலைவர்கள் கண்டனம்-- பொதுமக்களுக்கு நிலை விளக்கம்

சென்னை நவ. 17—

இராசகோபாலாச்சாரியார் வெளியிட்டுள்ள அறிக்கையைக் கண்டித்துக் கழகத் தோழமைக் கட்சிகளின் தலைவர்களான திரு. ஏ. ஆர். பெருமாள் எம்.எல்.ஏ. (பார்வர்டு பிளாக்) திரு. அப்துல் வகாப் எம்.எல்.சி. (முஸ்லிம் லீக்) கவிஞர் கண்ணதாசனும் அறிக்கை விடுத்துள்ளனர்.

ஆச்சாரியாரின் அபத்தமான யோசனையையும்--அவருடைய தீய நோக்கத்தையும்--சனநாயக விரோதப் போக்கையும் அந்த அறிக்கையில் எடுத்துக்காட்டி ஆணித்தரமான பதில் அளித்துள்ளனர்.

ஏ. ஆர். பெருமாள்

பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் ஏ. ஆர். பெருமாள் இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில கூறியிருப்பதாவது :—

"1952-ல் முதன்முதல் நடைபெற்ற பொதுத் தேர்தலில், அப்போது 'சென்னை ராஜ்யம்' என்று சொல்லப்பட்ட நமது மாநிலத்தில் கேரளத்தின் பகுதிகளும் —ஆந்திரத்தின் பகுதிகளும் இணைந்து இருந்தன; மொத்த சட்டமன்ற உறுப்பினர்கள் 375 பேர்; காங்கிரசு சார்பில் வெற்றி பெற்று வந்தவர்கள் 152 பேர்கள்தான்; மீதி 223 பேர் காங்கிரசை எதிர்க்கும் கட்சிகளும் -- சுயேச்சைகளும ஆவார்கள்.

அந்த நிலையில், பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர் -- டி. பிரகாசம் -- தென்னேட்டி விசுவநாதன் -- பி. இராமமூர்த்தி ஜீவானந்தம் போன்ற பெரும் தலைவர்கள் ஒன்று கூடி ஐக்கிய முன்னணி அமைத்து -- அந்தக் கட்சிக்கு 168 சட்டமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு கவர்னரிடம் அரசு அமைக்க அனுமதி கேட்டார்கள்; ஆனால் அன்றைய கவர்னர், 152 பேர்கள் இருந்த காங்கிரசுக்கு இராஜாஜியின் தலைமையில் அரசு அமைக்க வழிசெய்தார்; காரணம் -- காங்கிரசுக் கட்சி ஒன்றுதான் சட்டமன்றக் கட்சிகளில அதிகப்படி எண்ணிக்கைகொண்ட உறுப்பினர்கள் உள்ள கட்சியாக இருப்பது என்று சொல்லி -- எப்படியோ அன்றே மக்கள் நம்பிக்கையற்ற (இப்போது சொல்வது போல் பத்திரிகைப் பேச்சளவு நம்பிக்கைபோல் அல்ல) சட்டபூர்வமாக -- சனநாயக முறைப்படி தேர்தல் மூலம் மக்கள் அளித்த வாக்குகளின் மூலம் 'காங்கிரசு ஆட்சி வேண்டாம்' என்று தீர்ப்புக கூறியிருந்தும், காங்கிரசு ஆட்சியை வலுக்கட்டாயமாகத் திணித்து முதலமைச்சராகவும் இராஜாஜி அவர்களே சில கட்சிகளையும் -- சில நபர்களையும் தனது பக்கம் சேர்த்துக்கொண்டு அரசு நடத்தினார்.

அதன் பின்பு பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர், முதுகுளத்தூர் சட்டமன்றத்துக்கும்-- அருப்புக்கோட்டை நாடாளுமன்றத்துக்கும் ஒருசேர வெற்றி பெற்றதால், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் தேவர் இராஜினமா செய்தார்; இடைத் தேர்தல வந்தது; அந்த அருப்புக்கோட்டை இடைத் தேர்தலுக்கு பிரச்சாரம் செய்யவந்த இராஜாஜி, 'இந்தத் தேர்தல், நான் வேண்டுமா வேண்டாமா என்ற கேள்விக்கு பதில் சொல்லும்தேர்தல்' என்று கூறி, மக்களின் தீர்ப்பைக் கேட்டார்.

தேவர்நிறுத்திய பார்வர்டு பிளாக் வேட்பாளர் 20,000 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்; 'இராஜாஜி மீது நம்பிக்கை இல்லை' என்று மக்கள் (இப்போது பேடுகின்ற வீண் கூப்பாடு போல் அல்ல) சட்டபூர்வமாகத் தேர்தல் மூலம் தீர்ப்புக் கூறினர்கள்.

இராஜாஜி இராஜினமா செய்தாரா -- இல்லை; என்ன செய்தார்? சட்டமன்றத்தில் தமக்கு இருந்த பெரும்பான்மையை வைத்து நம்பிக்கைத் தீர்மானத்தை நிறைவேறச் செய்து பதவியை கெட்டியாகத் தக்க வைத்துக் கொண்டார்.

அதே இராஜாஜிதான் இப்போது, 'குடியரசுத தலைவர் ஆட்சி வேண்டும்' என்கிறார்.

மக்கள் நம்பிக்கையின் அளவுகோல் ,தேர்தல்தான் -- என்று நமது அரசியல் சட்டம் கூறுவதாகத்தான் நான் இதுவரை கூறிக்கொண்டு இருக்கிறேன்; ஏதோ நாட்டில் ஒரு பகுதியினர் சொந்த விருப்பு வெறுப்புகளுக்காகச் செய்கின்ற ஆர்ப்பாட்டங்கள், அளவுகோல்' என்று -- கவர்னர் பதவி, ,கவர்னர்--ஜெனரல் பதவி, முதலமைச்சர் பதவி, மத்திய அமைச்சர் பதவி போன்ற பெரும் பதவிகளை வகித்துவந்த இராஜாஜி கூறுவாரானால், 'இந்த நாடு சனநாயகத்துக்கும், நம்முடைய அரசியல் சட்டத்துக்கும விரோதமாக செயலபட வேண்டும் என்று எதிர் பார்க்கிறார்கள்' என்றுதான கூறவேண்டும்."

அப்துல் வகாப்

முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் அப்துல் வகாப் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :—

"இன்று தமிழ்நாட்டு அரசியல் நிலை பற்றிய இராஜாஜியின் அறிக்கையைப் பத்திரிகைகளில் பார்த்து வியப்புற்றேன்.

மொத்தம் 234 உறுப்பினர்களில் 198 பேருடைய ஆதரவு பெற்ற கலைஞருடைய அரசை, 'சட்டமன்றத்தில் நம்பிக்கை இழந்துவிட்டது' என்று சொல்லுவது மட்டரகமான -- உண்மைக்குப் புறம்பான கருத்து ஆகும்.

இந்நிலையில், 'சட்டமன்றத்தைக் கலைத்துக் குடியரசுத் தலைவர் ஆட்சி வருவதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை' என்று கூறுவது சனநாயக மரபை அவமதிப்பதாகும்; சாதாரண மனிதர் சொன்னால் இதைச் சகித்துக் கொள்ளலாம்; கவர்னர் -- ஜெனரலாக பணியாற்றிய ஒரு பெரியவர் இவ்வாறு கூறுவது அவர் நிலையை சந்தேகத்துக்குரியதாக்குகிறது.

இரண்டு நாட்களுக்கு முன்புதான் தி. மு. க. -- முஸ்லிம் லீக் -- பார்வர்டு பிளாக் -- தமிழரசுக் கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த 175 சட்டப் பேரவை உறுப்பினர்கள் ஒன்றுகூடி, கலைஞர் அரசுக்கு முழுமனதாக ஆதரவு தந்ததோடு, சபாநாயகர் மதியழகனைப் பதவி விலகக் கோரி கையெழுத்திட்டதை இராஜாஜி கருத்தில் கொள்ள தவறியது ஏன் என்று எனக்குப் புரியவில்லை.

இராஜாஜி சட்டப் பேரவையில் ஓர் உறுப்பினரின் கூடுதல் பலம் பெற்று இம்மாநிலத்தை ஆட்சி நடத்தியதை மறந்துவிட்டு இப்போது, குடியரசுத் தலைவரின் ஆட்சியைக் கோருவது, தான் குழம்பி விட்டது காரணமா அல்லது மக்களை குழப்பத்தில் ஆழ்த்த வேண்டும் என்பது காரணமா என்பதை விளக்குவாரா ?"

கவிஞர் கண்ணதாசன்

இ. காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த கவிஞர் கண்ணதாசன் கூறியிருப்பதாவது :—

"அர்த்தால் வெற்றி பெற்றுவிட்டது; கருணாநிதி அரசாங்கம் இராஜினமா செய்யவேண்டும். அல்லது விலக்கப்படவேண்டும் -- என்று இராஜாஜி வாதிடுகிறார்.

முதலில் இராஜாஜிக்கு எனது பதில் -- ஓர் அர்த்தால் வெற்றி பெறுவது என்பது, அந்த அர்த்தாலின் நோக்கத்தை மக்கள் ஒப்புக்கொண்டார்கள் என்பதாக ஆகாது.

பாதிக்கடைகள் மூடப்படுவது அச்சத்தினால்தான்; ஆகவே, யாரோ ஒருவர் சொன்னது நியாயம் -- அரசாங்கம் செய்தது அநியாயம என்று எல்லா மக்களும் ஒப்புக்கொண்டதாகக் கூறுவது, இந்திய அரசியலை அறியாதவர்களுக்கு நியாயமானதாக இருக்கலாம்; இராஜாஜியும் அவர்களில் ஒருவர்தானா?

178 எம்.எல்.ஏ.-க்கள், நம்பிக்கையில்லை' என்று கையெழுத்தும் போட்ட பிறகும் -- அந்தத் தீர்மானம் அவர் கைக்குப்போன பிறகும், 'நான் இராஜினமா செய்யமாட்டேன்' என்கிறாரே மதியழகன் -- அவருக்கு இந்த யோசனையை இராஜாஜி கூறட்டும்.

'தலைமையமைச்சர் என்ன நினைக்கிறார் என்று தெரியவில்லை' என்று இராஜாஜி வருந்துகிறார்; 'ஆட்சியைக் கவிழ்க்கிறார்'என்ற கெட்ட பெயரை உறுதி செய்து கொள்ள தலைமையமைச்சர் விரும்பவில்லை.

யாரோ ஒரு சிலரின் ஆர்ப்பாட்டங்களுக்காக மிகப் பெரிய 'மெஜாரிட்டி' உள்ள அமைச்சரவையை அவர் கவிழ்த்தால், அதே தலைவலி அவரது கட்சி ஆட்சியில் உள்ள மாநிலங்களிலும் உண்டாகும்.

1967-ல், 'காமராசர் ஒழிந்தால் தான் தர்மம் வாழும்' என்று

(4-ம் பக்கம் பார்க்க)

ஆச்சாரியாரின் நிலை தடுமாற்றம்

வெறுப்பின் விளிம்புக்கே போய்விட்டார்

ஐம்பத்திரண்டில் நடந்தது எழுபத்திரண்டுக்கு ஏற்காதா ?

செய்தியாளர்களிடம் முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

சென்னை, நவ. 1[7]—

"1952-ல் அருப்புக்கோட்டை நாடாளுமன்ற இடைத் தேர்தலில் காங்கிரசு வேட்பாளர் தோற்றுவிட்டால அது தன் தோல்வி என்றும், நான் இராஜினாமா செய்வேன்' என்றும் அறைகூவல் விடுத்திருந்த இராஜாஜி, அங்கே காங்கிரசுத் தோற்றதும் அந்த அறைகூவல்படி நடந்துகொள்ளாமல் -- சட்டமன்றத்தில் அவரே நம்பிக்கைத் தீர்மானம்' கொண்டுவந்து -- நூல் இழையில் தன் அரசாங்கத்துக்குப் பெரும்பான்மை இருப்பதை ஓட்டின்மூலம் எடுத்துக்காட்டி -- தன் அரசாங்கமே நீடிக்க அனுமதி கிடைத்ததாக நாட்டுக்கு அறிவித்தார்.

"இப்போது 180-க்கு மேற்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த ஆட்சியின் பக்கம் இருக்கும்போது, 'ஆட்சி நம்பிக்கை இழந்துவிட்டது' என்று கூறுவது, இராஜாஜி இதுவரையில் சொல்லிவந்த நாடாளுமன்ற சனநாயக முறையை அவரே குழி தோண்டிப் புதைத்துவிட்டு, 'இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி மக்கள் கட்சி' என்ற மாய்மாலப் பேச்சுக்கும் -- அராஜகத்தின் மூலம் ஆட்சியைக் கவிக்கலாம் என்ற ஆட்சிக் கவிழ்ப்புச் சதித் திட்டத்துக்கும் இந்தியக் கம்யூனிஸ்டு[க்] கட்சியோடு துணை போகிறார் என்றுதான் கூற முடியும்.

"சட்டமன்றத்தில் நவம்பர் 13-ந் தேதியன்[று] நடந்த நிகழ்ச்சிகள் பற்றி சில இந்தியப் பத்திரிகைகள் எழுதியி[ரு]க்கின்ற தலையங்கங்களை என்னுடைய அன்புக்கும் மதிப்புக்[கும்] உரிய இராஜாஜி அவர்கள் படித்துப் பார்த்துத் தெளிவடைய[] வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்."

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இராசகோபாலாச்சாரியாரின் அறிக்கை பற்றி நிருபர்களிடம் கருத்தறிவிக்கையில் கூறினார்; நிருபர்களின் கேள்விகளும்-முதலமைச்சரின் பதில்களும் வருமாறு :—

கேள்வி :—"இராஜாஜி அறிக்கை விடுத்துள்ளாரே -- அது பற்றி உங்கள் கருத்து என்ன ?"

பதில் :—"வெறுப்பின் விளிம்புக்கே இராஜாஜி போயிருக்கிறார்; அவருடைய ஆசைப்படியும்--அவருடைய வாழ்த்துப்படியும் எம். ஜி. ஆரின் புதிய கட்சி மதுவிலக்குப் பிரச்சாரத்தை வெற்றிகரமாக நடத்துவார்கள்-நடைமுறையில் காட்டுவார்கள் என்பதை இராஜாஜிக்கு சமர்ப்பித்துக் கொள்கிறேன்."

கேள்வி :—"இராஜாஜியின் அறிக்கையில், 'அமைச்சரவை பதவி விலக வேண்டும்' என்று கூறியிருக்கிறாரே ?"

பதில் :—"இவ்வளவு பெரிய அரசியல்வாதி இவ்வளவு பெரிய குழப்பத்திற்கு ஏன் ஆளானார் என்று எனக்குத் தெரியவில்லை."

"நவ. 13-ந் தேதி சட்டமன்றம் கூடியபோது, கேள்வி நேரம் போன்ற நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விட்டு -- அமைச்சரவை மீது கொண்டுவரப்பட்ட கண்டனத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டு -- அதை நேரடியாக விவாதிப்பதற்கு ஆளும் கட்சி தயாராக இருப்பதாக நான்சட்டமன்றத்தில்அறிவித்திருக்கிறேன்,

மதியழகன் அரசியல் வாழ்வுக்கே முற்றுப்புள்ளி

அவைத் தலைவருக்குரிய மரபையே கெடுத்துவிட்டார்

[✱]

சொந்தக் கருத்தை மன்றத்தின் கருத்தாகத் திணிக்க முயற்சி

[★]

கருணாநிதி அமைச்சரவை பதவியில் நீடிக்கும் உரிமை பற்றி யாரும் அறைகூவல்விட முடியாது

[✱]

பிரபல ஆங்கில நாளிதழ்கள் வெளியிடும் திட்டவட்டமான கருத்துக்கள்

சென்னை, நவ. 16 —

"திரு. கே. ஏ. மதியழகன் பல்வகை வரலாறுகள் படைத்தவர்; ஆனால் அவரது இந்த அசாதாரண நடவடிக்கையால் தமது அரசியல் வாழ்வுக்கே ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார் போலிருக்கிறது" என்று, 'இந்துஸ்தான் டைம்ஸ்' ஏடு தெரிவித்துள்ளது.

தமிழகச் சட்டப் பேரவையைக் காரணமின்றித் தள்ளிவைத்ததன் மூலம், எதிர்க் கட்சியினருக்குத் தமது ஆதரவை வெளிப்படையாகவே காட்டிக்கொள்ளத் துணிந்துவிட்ட கே. ஏ. மதியழகன் செயலைக் கண்டித்து, வடநாட்டிலிருந்து வெளிவரும் 'நேஷனல் ஹெரால்டு' — 'ஸ்டேட்ஸ்மன்' — டைம்ஸ் ஆப் இந்தியா' — 'பேட்ரியாட்' ஆகிய ஆங்கில ஏடுகளும், தமிழ்நாட்டைச் சேர்ந்த 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடும் கருத்தறிவித்துள்ளன.

"மதியழகன் தமது அதிகாரத்தை மீறி நடந்துவிட்டார்; ஓர் அவைத் தலைவரின் அதிகாரம் எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவுக்கு அவரது பாரபட்சமின்மையும் முக்கியமானதாகும்" என்று — பண்டித நேருவால் துவக்கப்பட்ட 'நேஷனல் ஹெரால்டு' பத்திரிகை தெரிவித்துள்ளது.

"அவைத் தலைவருக்குப் பாரம்பரியமாகக் கட்சிச் சார்பில்லாமல் இருக்க வேண்டிய பணி பாதிக்கப்பட்டிருக்கிறது" என்று 'ஸ்டேட்ஸ்மன்' ஏடு சுட்டிக்காட்டியிருக்கிறது.

"எவ்வளவுதான் பாங்கான விளக்கம் தந்தாலும், டிசம்பர் ஐந்தாம் தேதிக்குச் சட்டமன்றத்தை ஒத்திவைத்ததை 'நேரிய வழியிலிருந்து தவறியதாகும்' என்றே வர்ணிக்க வேண்டும்" என்று 'டைம்ஸ் ஆப் இந்தியா' எடுத்துக்காட்டியுள்ளது.

"அவையின் கருத்தும் விருப்பமும் வெற்றியடையச் செய்வதே ஓர் அவைத் தலைவரின் கடமையாகும்; சட்டமன்றத்தின் கருத்துக்கும் — விருப்பத்துக்கும் மாறாக அவைத் தலைவர் தமது சொந்தத் தீர்ப்பைத் திணித்துவிட முடியாது," என்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' எழுதுகிறது.

மேற்கண்ட பத்திரிகைகளில் வெளியாகியுள்ள கருத்துக்கள் வருமாறு:—

'அதிகாரத்தை மீறி நடந்தார்'

'சனநாயகத்தின் அடிப்படை விதியை உணரத் தவறிவிட்டார்'

'பாரபட்சமின்றி நடக்க வேண்டுமென்பதை மறந்து அரசியல் சட்ட நெருக்கடியை உருவாக்கினர்'

பண்டித ஜவகர்லால் நேருவால் நிறுவப்பட்ட 'நேஷனல் ஹெரால்டு' ஏடு, 15-11-72 அன்று எழுதியுள்ள தலையங்கம் வருமாறு:—

"தமிழ்நாடு சட்டப் பேரவையை — அதன் அவைத் தலைவர் ஒத்திவைத்ததும், மறுதேர்தலை நாடவேண்டுமென முதலமைச்சருக்கு யோசனை கூறியதும் அரசியல் சட்ட நெருக்கடியை உருவாக்கியிருக்கிறது.

சட்டமன்றத்தில் பலம் பரீட்சை நடப்பதற்கு முன்னர், 'அரசு பெரும்பான்மையை இழந்துவிட்டது' என்று கூறுவதற்கு ஓர் அவைத் தலைவருக்கு உரிமை உண்டா?—மதியழகன் அவரது அதிகாரத்தை மீறி நடந்துவிட்டார்.

ஓர் அவைத் தலைவருக்கு அதிகாரம் எவ்வளவு முக்கியமானதோ அந்த அளவுக்குப் பாரபட்சமின்மையும் முக்கியமானதாகும்.

1968-ல் ஐக்கிய முன்னணி அரசை ஆளுநர் டிஸ்மிஸ் செய்ததையடுத்து புதிய அமைச்சரவையை அவைத் தலைவர் அங்கீகரிக்க மறுத்ததும் மேற்கு வங்கச் சட்டமன்றத்தில் நெருக்கடி ஏற்பட்டது; ஆனால், தமிழ்நாட்டில் நிகழ்ந்திருப்பது, மேற்கு வங்க நிகழ்ச்சியிலிருந்து மாறுபட்டதாகும்.

மேற்கு வங்கத்தில் சட்டமன்றத்தைக் கூட்ட ஐக்கிய முன்னணி அமைச்சரவை மறுத்தது; ஆனால், தமிழ்நாட்டில சட்டமன்றத்தை முதலமைச்சர் கூட்டியிருக்கிறார் என்பதுடன் தனது பெரும்பான்மையையும் அவர் இழந்துவிடவில்லை.

தி. மு. கழகம் மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டதாக—அவைக்கு வெளியேயுள்ள நிலைமையை வைத்துத் தாம் கூறுவதாக மதியழகன் சொல்கிறார்; இந்த ஒன்றில்தான் அவர் தவறான வழியில் சென்றுவிட்டார்!

காங்கிரசு — கம்யூனிஸ்டு — சோஷலிஸ்டு ஆகிய கட்சிகள் தி. மு. கழகத்துக்கு அளித்துவந்த ஆதரவைத் திரும்பப் பெற்றுவிட்டன என்பதும் — கழகத்தில் பிளவு ஒன்று ஏற்பட்டுள்ளது என்பதும் உண்மைதான்; ஆனால், இதனாலேயே அரசு விலகிவிட வேண்டும் என்று பொருள்கொள்ள முடியுமா?

"சட்டமன்றத்தைக் கூட்டமாட்டேன்' என்று முதலமைச்சர் கருணாநிதி கூறியிருந்தால் அவரைக் குறைகூறலாம்; ஆனால் திரு. கருணாநிதி, சனநாயக அரசியல் சட்ட விதிமுறைகளிலிருந்து விலகிவிடவில்லை என்பது, அவருக்குச் சிறப்பைச் சேர்க்கக்கூடிய ஒன்றாகும்.

சட்டமன்றத்தை ஒத்திவைக்குமுன், 'அசாதாரண நிலையில் நாம் இருக்கிறோம்' என்று மதியழகன் கூறினர்.

எதிர்க் கட்சியினர், அரசுக்கு எதிராக பெரியதோர் ஆர்ப்பாட்டத்தை நடத்தினால், அரசு இராஜினாமா செய்யவேண்டுமா?—அதுதான் விதி என்றால், எந்த அரசையும் பதவியிலிருந்து இறங்கிடச் செய்ய முடியும்.

இது எப்படியிருப்பினும், அவைத் தலைவராக இருப்பவர், அவைக்குள் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றி மட்டுந்தான் கவனிக்க வேண்டும்.

எம். ஜி. இராமச்சந்திரன் கட்சிக்கு சட்டமன்றத்தில் 9 உறுப்பினர்களே இருக்கிறார்கள்; ஆகவே மக்களின் கருத்தை அந்தக் கட்சி பிரதிபலிப்பதாகக் கூற முடியாது.

தி. மு. கழக அரசு பெரும்பான்மையை இழந்துவிட்டதாக எதிர்க் கட்சியினர் கருதினால், சட்டமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் அரசை தோல்விறச் செய்ய வேண்டும்; அது ஒன்றே சனநாயக பூர்வமான — அரசியல் சட்டப்படியான — கண்ணியமான வழிமுறையாக இருக்க முடியும்; அத்தகைய வழியைக் கடைப்பிடிக்க எதிர்க் கட்சி தவறிவிட்டது என்பதொன்றே — எதிர்க் கட்சிக்குத் தன் பலம் பற்றிய உறுதி இல்லை என்பதைத் தெளிவாக்குகிறது.

அவைத் தலைவரின் 'அசாதாரண'த் தீர்ப்பு, நிலைமையை மோசமாக்கிவிட்டது; அவை மீண்டும் கூடும்போது அவர் என்ன செய்வார்? அப்போதும் அவர் இப்படிச் செய்வாரானால், அரசியல் நெருக்கடியை உண்டாக்குபவராக அவர் ஆவார்.

தி. மு. சழகம் — முஸ்லிம் லீக் — பார்வர்டு பிளாக் — தமிழரசுக் கழகம் ஆகியவை தனக்கு எதிராகக் கொண்டு வந்திருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அவர் எதிர்நோக்க வேண்டும்; அவர் வெற்றி பெற்றால், 'அரசு பெரும்பான்மையை இழந்து விட்டது' என்பது வெளிப்படையாகத் தெரியும்.

மக்களிடம் மீண்டும் சென்று மற்றொரு முறை அவர்களது தீர்ப்பைப் பெறவேண்டிய அவசியம் முதலமைச்சருக்கு இல்லை; சடந்த ஆண்டுதான் தேர்தல்கள் நடந்துள்ளன; நிகழ்ந்துள்ள ஒரே ஒரு 'அசாதாரண நிகழ்ச்சி' — எம். ஜி. இராமச்சந்திரனும், சில எம். எல். ஏ.-க்களும் எதிர்க் கட்சியில் சேர்ந்துவிட்டதுதான்!

இருப்பினும், தி. மு. கழக அரசு, கணிசமான பெரும்பான்மை பலத்தைப் பெற்றிருக்கிறது; அரசின் பலவீனம் எதுவாயினும், கருணாநிதி அரசு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதோர் அரசாகும். சட்டமன்றத்தில் பெரும்பான்மை இருக்கும் வரையில், ஆட்சி நடத்த அவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும். சனநாயகத்தின் இந்த அடிப்படை விதியை இந்த அவைத் தலைவருக்கு நினைவுபடுத்த வேண்டியிருப்பது வருந்தத்தக்க ஒன்றாகும்."

'உரிமைகளை மீறினர்'

★

'கடமைகளைப் புறக்கணித்தார்—நேர்மையினின்றும் தவறினர்'

'தவறான செய்கையால் உருவாகியுள்ள நெருக்கடிக்கு தெளிவான தீர்வு ஏது?'

'டைம்ஸ் ஆப் இந்தியா' ஏடு, நவம்பர் 15-ந்தேதியன்று 'தமிழ்நாட்டில் பாரபட்சம்' எனும் தலைப்பில் எழுதிய தலையங்கம் வருமாறு:—

"தமிழ்நாட்டிலுள்ள கருணாநிதி அமைச்சரவையின் செல்வாக்கு அல்லது சாதனை பற்றி யார் நினைத்துப்பார்த்தாலும் அந்த அமைச்சரவை பதவியில் நீடிக்கும் உரிமை பற்றி யாரும் அறைகூவல் விட முடியாது; ஆனால், திங்கட்கிழமையன்று மாநில சட்டமன்றத்தில், அவைத் தலைவர் மதியழகனின் நடவடிக்கைகள் அப்படிச் சொல்ல முடியாது.

அவையை மூன்று வாரங்களுக்கு ஒத்திவைத்ததன்மூலம் அவர் தெளிவாக தனது உரிமைகளை மீறியிருக்கிறார்; தனது அடிப்படை கடமைகளைப் புறக்கணித்திருக்கிறார்.

சூடான விவாதங்கள் எதிர்க் கட்சியினருக்கும் — ஆளும் கட்சியினருக்கும் சட்டமன்ற நிகழ்ச்சி குறித்து ஏற்பட்டுவிட்டது என்ற காரணத்தால், சில மணி நேரமோ அல்லது அடுத்த நாளைக்கோ சட்டசபையை ஒத்திவைத்து, சூடு குறைய அவர் அவகாசம் [illegible]திருந்தால் அது வேறு விஷயம்.

தன்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் இருக்கும்போது, 'விவாதத்தை எவ்வளவு காலத்திற்கு ஒத்திவைக்க முடியுமோ அவ்வளவு காலத்திற்கு ஒத்திவைத்தார்' என்று தம்மீது குற்றஞ்சாட்டுவதற்குக் கதவைத் திறந்து விட்டுவிட்டார்.

சில நிமிடங்களுக்கு முன்னர்தான், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நவம்பர் 14-ந் தேதி சந்திப்பதற்கு விருப்பம் தெரிவித்தார்.

ஆகவே, எவ்வளவுதான் பாங்கான விளக்கம் சொன்னாலும், டிசம்பர் ஐந்தாந் தேதிக்குச் சட்டமன்றத்தை ஒத்திவைத்ததை, 'நேரிய வழியிலிருந்து தவறியதாகும்' என்றே வர்ணிக்க வேண்டும்.

அவர் தனது பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கும் தனி விருப்பம் இல்லாதவராக இருக்கலாம்; 'கருணாநிதி அமைச்சரவை பதவி விலக வேண்டும்' என்று சட்டமன்றத்தில் அவர் சொன்ன அறிவுரைக்குச் செவிசாய்க்க வேண்டும் என்று அவர் விரும்புவதாகவும் இருக்கலாம்.

அப்படியிருந்தால், அவர் ஒளிவு மறைவு இல்லாமல், 'அண்ணா தி. மு. க.-வின்பால் பாராபட்சம் கொண்டவர்' என்று தம்மை வெளிப்படுத்திக் கொள்வதில் வெற்றி பெற்றவராகிறார்!

மதியழகனின் தவறான செய்கையின்மூலம் உருவாக்கப்பட்ட விந்தையான அரசியல் சட்ட நெருக்கடிக்கு சுலபமான தீர்வு வழி ஏதும் இல்லை.

தன்னையும் — மத்திய அரசாங்கத்தையும் தர்மசங்கடமான நிலையிலிருந்து காப்பாற்ற அவர் 234 பேர் கொண்ட சட்டமன்ற உறுப்பினர்கள் 182 பேர் கையெழுத்திட்டு 'நம்பிக்கையில்லை' என்று தெரிவித்துள்ள கடிதத்தைக் கவனத்தில் கொண்டு, பதவியிலிருந்து இறங்க ஒப்புக்கொள்ளலாம்; இல்லையெனில் ஆளுநர் தனது அரசியல் சட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி, சட்டமன்றத் தொடரை முடித்து — மீண்டும் சட்டமன்றத்தைக் கூட்டலாம்.

எந்தவகையிலும் தமிழ்நாட்டு எதிர்க் கட்சிகளிடமிருந்து—குறிப்பாக அண்ணா தி. மு. க.-விடமிருந்து 'சைகை' பெற்ற கருணாநிதி அமைச்சரவையைக் கலைக்க எந்தவிதமான காரணமும் இல்லை.

அந்தக் கட்சிக்குச் செல்வோர் அதிகமென்றாலும்கூட ஆளும் கட்சி, மாநில சட்டமன்றத்தில் பெரும் அளவில் பெரும்பான்மை பெற்றிருக்கிறது.

மதியழகனின் கூற்றை ஆதரிக்கும் விதத்தில், மாநிலத்தின் சட்ட — ஒழுங்கு இயந்திரம் உடைந்துவிட்டதாகக்கூடக் கருதுவதற்கு எந்த விதமான காரணமும் இல்லை; அத்துடன், சட்டமன்றத்தைக் கலைப்பதற்கான அசாதாரணமான சூழ்நிலையும் இல்லை.

கல்வி நிலையங்கள் மூடப்பட்டிருப்பதும், அண்ணா தி. மு. க.-வினருக்கும்—போலீசுக்கும் சில இடங்களில் மோதல் ஏற்பட்டிருப்பதும் உண்மை.

பிற மாநிலங்களில் செய்வதைப்போல், குடியரசுத் தலைவரின் உத்தரவு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கத்தைக் கவிழ்க்க இது ஒரு காரணமாகாது.

அண்ணா தி. மு. க.-வும்—பிற எதிர்க் கட்சிகளும், 'மாநில அரசில் ஊழல்' என்று கூறி மக்கள் கவனத்தைத் திருப்பவும் — சட்டமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஆதரவைத் தேடவும் உரிமை இருக்கிறது.

தங்களது இலட்சியத்தைக் கிளர்ச்சிமூலம் மட்டுமே அடைந்துவிட வேண்டும் என்று நினைப்பார்களானால், அவர்கள் மாபெரும் தவறைச் செய்தவர்களாவார்கள்.

அண்ணா தி.மு.க. உட்பட அனைவருமே மாபெரும் மக்கள் இயக்கத்தைத் திரட்டவும், கட்சி அணிகளின் பாரம்பரியத்தை உருவாக்கி ஆளும் தி. மு. கழகத்திற்கு எதிராக மதிப்புமிக்க ஒரு மாற்றுக் கட்சியாக உருவாக இன்னும் நீண்ட தொலைவு அவர்கள் பயணம் செய்ய வேண்டும்."

'மனம்போன போக்கில் சட்டமன்றப் பணிகளை முடக்க அவைத் தலைவருக்கு அரசியல் சட்டம் அதிகாரம் அளிக்கவில்லை'

'சட்டம் பயிலுவோர் அதிர்ச்சியடைவர்'

'பேட்ரியாட்' எனும் ஏடு 15—11—72 இதழில் எழுதியிருப்பதாவது:—

"சட்டமன்றத்தை அவர் மனம் போனபடி முடக்க அரசியல் சட்டம் அவைத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கவில்லை; ஒரு மாநிலத்தில் அரசு மக்களின் நம்பிக்கையைப் பெற்றதாக இருக்கிறதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கின்ற வேலை அவைத் தலைவருடையது அல்லவே அல்ல; அத்தகைய ஒரு சலுகையை தனக்குத் தானே அவைத் தலைவர் எடுத்துக்கொள்ள முடியாது; அதுவும், அரசு தெளிவான பெரும்பான்மை கொண்டிருக்கும்போது அப்படி ஒரு அதிகாரத்தை அவைத் தலைவர் எடுத்துக் கொள்ளுவதைக் காணுகின்ற இந்திய அரசியல் உரிமைச் சட்டத்தைப் பயிலும் மாணவர் எவரும் அதிர்ச்சியடைவர்.

அவையை, அவைத் தலைவர் ஒத்திவைப்பதென்பது, சில ஆண்டுகளுக்குமுன் மேற்கு வங்க மாநிலத்தில் நடந்த ஒன்றுதம்; ஆனால், அன்று அவரது தீர்ப்பை அவையின் பெரும்பான்மை உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டனர் என்பதிலும், தாம் மாநிலத்தின் நிர்வாகத் தலைமைக்கு (ஆளுநருக்கு) எதிராகவே செயல்படுகிறோம் என்பதையும் உறுதியாக அறிந்திருந்தார்."

அவைத்தலைவரின் கடமை சட்டமன்றப் பணிகளைத் தடைசெய்வது அல்ல

'அவையின்கருத்து—விருப்பத்துக்கு மாறாகத் தமது சொந்தத் தீர்ப்பைத் திணித்துவிட முடியாது'

"இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடு, 15—11—72 அன்று எழுதிய தலையங்கத்தின் சில பகுதிகள் வருமாறு:—

"மாநிலத்தில் அசாதாரண நிலை நிலவுவதாகக் குறிப்பிட்டு, 'தி.மு.க. அமைச்சரவை சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு மக்கள் தீர்ப்பைப் புதிதாகப் பெற வேண்டும்' என்று அவைத்தலைவர் கூறிய யோசனையை முதலமைச்சர் நிராகரித்ததைத் தொடர்ந்தே அவை ஒத்திவைப்பு நடைபெற்றிருக்கிறது.

"ஆளும் கட்சியில் பிளவு ஏற்பட்டது; ஆகவே, கட்சி, மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது; எனவே அமைச்சரவை இராஜினாமா செய்யவேண்டும்' என்று கம்யூனிஸ்டுக் கட்சியும் — இராமச்சந்திரன் கட்சியும் கோரி வந்ததையே அவைதலைவர் தெளிவாகப் பிரதிபலித்தார்.

சட்டமன்றத்தின் பணிகள் நடைபெறத் துணையாக இருப்பதே ஒரு அவைத் தலைவர் கடமையே தவிர, சட்டமன்றப் பணிகளைத் தடைசெய்வது அல்ல!

பஞ்சாப் கிளர்ச்சியை அடுத்து நடந்த நீண்ட விவாதமும், அந்த வழக்கில் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பும் அவைத் தலைவர் அதிகாரம் என்னென்ன என்பதை சந்தேகத்துக்கு இடமில்லாமல் தெளிவாக்கியிருக்கிறது. அவைத் தலைவர்களின் அமைப்பினரால் நியமிக்கப்பட்ட குழு 1968 ம் ஆண்டு கூறியதுபோல், ஓர் அவைத் தலைவரின் அதிகாரம் என்பது அந்த அவையின் அமைதியோடு அவர் நடத்திச் செல்வதிலிருந்து பிறப்பதாகும்.

அவையின் கருத்தும் — விருப்பமும் வெற்றியடையச் செய்வதே ஒரு அவைத் தலைவரின் கடமையாகும். சட்டமன்றத்தின் கருத்துக்கும் விருப்பத்துக்கும் மாறாக அவைத் தலைவர், அங்கு தமது சொந்தத் தீர்ப்பைத் திணித்துவிட முடியாது."

'முறையற்றது—நியாயமற்றது'

'அவைத் தலைவர் பதவிக்கே மதிப்புக்குறைவை ஏற்படுத்தினர்'

15—11—72 அன்று 'இந்துஸ்தான் டைம்ஸ்' எழுதியுள்ள தலையங்கம் வருமாறு:—

"எந்த அளவுகோலை வைத்துப் பார்த்தாலும், தமிழ்நாடு சட்டமன்ற தலைவர் கே. ஏ. மதியழகன், தி. மு. கழக அமைச்சரவை — மக்களிடத்தில் நம்பிக்கைபெற்று வருமாறு கூறியபின், திடீரென்று அவையை ஒத்திவைத்தது முறையற்றது — நியாயமற்றது!

"முதலமைச்சர் கருணாநிதி, சட்டமன்றத்தில் பெரும்பான்மை பெற்றிருக்கிறார்; எதிர்க்கட்சி அதைச் சோதிக்க விரும்பினால், அவைமுன் இருந்த கண்டனத் தீர்மானத்தை விவாதித்து வாக்கெடுப்பு நடத்தியிருக்கலாம்.

சட்டமன்றத்தில் ஒத்திவைத்தபின், ஆளும் கட்சியைச் சார்ந்த 178 உறுப்பினர்கள்கூடி — கட்சிக் கூட்டத்தில் — அவைத் தலைவரின் இராஜினாமாவைக் கோரியிருக்கின்றனர்; முதலமைச்சர் கருணாநிதிக்குத் தமது ஆதரவைத் தெரிவித்திருக்கின்றனர்.

தி. மு. கழகத்தில் பிளவு ஏற்பட்ட பின், ஒன்பது எம்.எல்.ஏ.-க்கள் தான் கொண்டுபோகப்பட்டிருக்கின்றனர்; இது, ஒரு அரசாங்கம் மக்கள் ஆதரவை இழந்துவிட்டதாகக் கொள்ளமுடியாது.

கே. ஏ. மதியழகன், வெளிப்படையாக 'அரசியல்' புரிந்திருக்கிறார்; விரும்பத் தகாத விளைவுகளை ஏற்படுத்தும் அரசியல் முன்மாதிரியை ஏற்படுத்தியதன் மூலம், 'அவைத் தலைவர்' எனும் பதவிக்கு மதிப்புக் குறைவைக் கொண்டுவந்து விட்டார்!

அவைத் தலைவர் பதவியிலிருந்து விலக்கிட ஒரு தீர்மானம் இருப்பதைத் தவிர்க்க அவர் அப்படி நடந்துகொண்டார் எனக் கூறி அவர் மீதுள்ள பழியைக் குறைக்க முயன்றாலும், 'அண்ணா தி.மு.க.' மீது அவருக்குள்ள நன்றியுணர்வை நிலைநிறுத்திவிட்டார்!

மக்களின் விருப்பத்தைப் பற்றிப் பேசுவதும், 'ஒரு அரசாங்கம் பெரும்பான்மை பெற்றிருக்கிறதா இல்லையா' என்று அறிந்து 'சர்டிபிகேட்' கொடுப்பதும் ஓர் அவைத் தலைவரின் [illegible]வேலையல்ல! இது சட்டமன்றத்தில் முடிவுசெய்ய வேண்டியதே[illegible] தவிர, 'ராஜ் பவன்'களில் அல்ல—குறிப்பாக அவைத் தலைவர[illegible] அல்ல!

மதியழகன் செய்வதுபோல், ஓர் அ[illegible]வைத் தலைவர் இப்படி நடப்பது — இந்தப் பணியை மேற்கொள்ள[illegible], தனது அதிகாரத்தை மீறுவதாகும்; நாடாளுமன்ற முறை[illegible] 'நான்சென்ஸ்' ஆக்குவதுமாகும்!

அரசியல் ரீதியான — நாடாளும[illegible]ற முறையிலான விதிமுறைகளையும் — நிறுவப்பட்ட மரபுகளையும் [illegible]றி அரசியல் சட்ட நெருக்கடியை ஏற்படுத்தி, அமைச்சரவை[illegible] கலைக்கவோ — சட்டமன்றத்தைக் கலைக்கவோ — ஒத்திவைக்க[illegible] — குடியரசுத் தலைவர் ஆட்சியை நிறுவிடவோ வழிவகுப்ப[illegible] [illegible]றைகளைக் களையும் வழியாகிவிடாது!

நாடாளுமன்ற முறைகளில் அல்லாத வழிகளில் தமது அரசாங்கத்தை விலக்க இந்த நிகழ்ச்சிகள் ஒரு 'சதி' நடக்கி[illegible] — எனக் கருணாநிதி கருதினால், அவரை நாம் பழி கூற முடியாது.

ஆகவே, ஆளுநரும் — மத்திய அரசும் அரசியல் பாரபட்சம் காட்டியதாக எந்தவிதமான சந்[illegible]மும் வராதபடி வெகு விழிப்போடு இணைந்து செயல்பட வேண்டும்.

தமிழ்நாட்டின் நெருக்கடி, குடியரசுத் தலைவரின் ஆட்சி ஏற்படுவதற்கான நிலைமை அல்லவே அல்ல!

அவைத் தலைவரின் நடவடிக்கை, அரசியல் சட்ட ரீதியான இடைவெளியைக் குறிக்கிறது.

சட்டம் மூலமாகவோ — அரசியல் சட்டத் திருத்தம் மூலமாகவோ ஓர் அவைத் தலைவர் இவ்வித ஓரவஞ்சகமாக சமரசம் செய்பவரின் முறை நடப்பதைத் தடுக்க [illegible]வழிகண்டாக வேண்டும்.

அஜாய் முகர்ஜியின் ஐக்கிய முன்னணி ஆட்சியில் மேற்கு வங்கச் சட்டமன்ற அவைத் தலைவ[illegible] இதுபோன்ற நடவடிக்கை மூலம் இந்தப் பிரச்சினை, நாட்டின் கவ[illegible]த்திற்கு வந்தது.

தமிழகத்திலும் — வெளியிலு[illegible] உள்ள தி. மு. கழகத்திற்கு எதிரான அரசியல் எதிர்க் கட்சியின[illegible] நிகழ்ச்சிகள் இந்தத் திசையில் நடைபெறுவது கண்டு மகிழ்ச்சியடையலாம்; அப்படி மகிழ்ந்தவர்கள், இதுபோன்ற தகாவழி நடத்தைகளுக்கு ஆதரவுதந்து வருவார்களேயானால், அவர்கள் இந்தியாவில் நாடாளுமன்ற சனநாயகத்திற்கே சவக்குழி தோண்டுகின்றவர்களாக ஆவார்கள்!

அவைத் தலைவர் மதியழகன், பல்வகை வரலாறுகள் படைத்தவர்; ஆனால், இந்த அவசர — அசாதாரணமான நடவடிக்கையால், தமது அரசியல் வாழ்வுக்கே முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்போல் இருக்கிறது!"

'நாடாளுமன்றச் செயல்முறைகளை அதன் காப்பாளர்களே கெடுப்பதா?'

'பதவியைவிட்டு விலகவேண்டும் என்பது இயற்கைக்குப் புறம்பானது அல்ல'

புதுடில்லியிலிருந்து வெளியாகும் ஆங்கில நாளேடான 'ஸ்டேட்ஸ்மன்' தனது 5—11—72-ந் தேதியிட்ட இதழில், தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவரின் அறிவிப்புக் குறித்து எழுதியுள்ள தலையங்கம் வருமாறு:—

"'அசாதாரணம்' என்று அவைத் தலைவர் கே. ஏ. மதியழகன் அறிவித்ததை, அத்தனை அசாதாரணமற்றதென்று தி. மு. கழக அரசு கருதியிருப்பது, எதிர்பார்க்கப்படாத ஒன்று அல்ல! ஆனால், மதியழகன் கூறிக்கொண்டதுபோல், ஓர் அவைத் தலைவர், நேசபாவத்துடன், யோசனை சொல்லலாம்; ஆனால், ஒரு தீர்ப்புக்கும் — யோசனைக்குமிடையே வேறுபாடு காட்ட அவர் எடுத்த முயற்சிக்கு அவர் அடுத்து தன் கட்சியைப் பற்றியும் — முதல்வரைக் கண்டிக்கும் பொருள் பொதியவும் கூறிய வார்த்தைகள் துணை செய்வதாக இல்லை.

அவைத் தலைவருக்கும் பாரம்பரியமாகக் கட்சி சார்பில்லாமல் இருக்க வேண்டிய பணி பாதிக்கப்பட்டிருக்கிறது; அது மட்டுமல்ல; டிசம்பர் 5-ந் தேதி வரை அவையை ஒத்திவைத்த அவர் விடுத்த அறிவிப்புக்கும் — அவையின்முன் செவ்வாயன்று விவாதிக்கப்படுவதாக இருந்த இரு நம்பிக்கையில்லாத் தீர்மானங்களோடு தொடர்புப் படுத்தி பாராமல் இருப்பது மிகக் கடினமாக இருக்கிறது

தங்கள் கருத்துக்களை வெளியிட இருந்த வாய்ப்பு பறிக்கப்பட்ட நிலையில், தி. மு. கழகத்தினரும் — அவர்களது மூன்று தோழமைக் கட்சியினருமான 182 எம்.எல்.ஏ.-க்கள், 'அவைத் தலைவர் பதவியை விட்டு மதியழகன் விலக வேண்டும்' என்று கடிதம் எழுதியது இயற்கைக்குப் புறம்பானது அல்ல!

இப்படிப் பதவி விலகக் கோரியது வழக்கத்துக்கு விரோதமாக இருக்கலாம்; ஆனால், இப்படிப்பட்டதோர் இணை காண முடியாத நெருக்கடியை யோசனையற்று உருவாக்கியதற்கு மதியழகனே குறை கூறப்பட வேண்டும்.

1968-ல், மேற்கு வங்க சட்டப் பேரவைத் தலைவர், தனக்கு எதிரான தீர்மானத்தைப் புறக்கணித்து — அவையை ஒத்திவைத்தது முன்மாதிரி ஆகாது!

இதேபோல் பஞ்சாபில் அவைத் தலைவராக இருந்தவர் எடுத்த நடவடிக்கை சட்டப்படி தவறானது என்றாகியது; 'சட்டமன்றத்தின் பெரும்பான்மையினர் வேறு வகையாக முடிவு செய்தாலன்றி, மாநிலத்தின் வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்படும் வரையில் பஞ்சாப் மாநில சட்டமன்றம் கூடிட வேண்டும்' என்று அம்மாநில ஆளுநர் அப்போது வெளியிட்ட அவசரப் பிரகடனம் முற்றிலும் நியாயமானதே' என்று தலைமை நீதிமன்றம் தீர்ப்பு அளித்தபோது பெரும்பான்மையினர் ஆட்சி பற்றிய அடிப்படை முக்கியத்துவமுள்ள ஒரு கோட்பாட்டையே சுப்ரீம் கோர்ட்டு பாதுகாத்து நின்றது; இதுபற்றிக் கவனியாமலேயே திங்களன்று சென்னையில் நிகழ்ச்சிகள் நடந்துள்ளதாகத் தெரிகிறது.

மதியழகன் கூறிக்கொள்வது போல, சட்டமன்றத்தில் அலுவல்கள் நிகழாவண்ணம் 'ஸ்தம்பித்த நிலை' ஏற்பட்டிருந்தாலும், அதற்குச் சட்டபூர்வ நிவாரணமாகக் கருணாநிதி அரசின்மீது எம். ஜி. இராமச்சந்திரன் கட்சியினர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கலாம்; தற்போது அவைத் தலைவர்மீது கொண்டுவரப்பட்டு விவாதிக்கப்பட்டிருக்கும் இரு நம்பிக்கையில்லாத் தீர்மானங்களும் பலப்பரீட்சை காணத்தக்க வாய்ப்பாக இருந்திருக்க முடியும்.

அவைத் தலைவரின் யோசனை ஒரு புறம் இருப்பினும், மாறுபட்ட சூழ்நிலையிலும் இந்த அரசுவாழ முடியுமா இல்லையா என்பதை அறிய இது ஒன்றே தக்க வாய்ப்பாக இருந்திருக்கும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த வழிமுறையின்படி நடந்துசெல்ல எதிர்க்கட்சியினர் தயக்கம் காட்டுவது, அவர்களது சட்டமன்றப் பலவீனத்தைத்தான் வெளிப்படுத்துகிறது.

எம். ஜி. இராமச்சந்திரனின் பொதுச் செல்வாக்கு எவ்வளவு பலம் வாய்ந்ததென்றாலும், அவர் கட்சியில் இருப்பது ஒன்பது எம்.எல். ஏ.-க்கள்தான்; வலது கம்யூனிஸ்டு — பழைய காங்கிரசு ஆகியவற்றின் சந்தர்ப்பவாத ஆதரவுடனும்கூட, 234 பேர்களைக்கொண்ட சட்டமன்றத்தில் 40 வாக்குகளுக்குமேல் அவரால் திரட்டிட முடியாது.

சட்டமன்றத்தில் சாதிக்க முடியாததை, கடையடைப்பு—ஆர்ப்பாட்டங்களின் மூலம் சாதித்திட இராமச்சந்திரன் மேற்கொள்ளும் முயற்சிகளையோ அல்லது நாடாளுமன்ற செயல்முறைகளை அதன் காப்பாளர்களே கெடுப்பதையோ — கூறப்படும் குறை எதுவும் மன்னித்துவிடாது."

வைசூரி நோய் ஒ[illegible]ப்புத் திட்டத்தின் நோக்கம்

தடுப்பு ஊசி போடப்பட்ட[illegible] மரண எண்ணிக்கை குறை[illegible]வு

புதுடில்லி, நவ. [illegible] —

நவ. 14-ம் நாள் முதல் 28-ம் [illegible] வரை வைசூரி நோய் ஒழிப்பு வா[illegible] கடைபிடிக்கப்படுகிறது; இ[illegible] நோயால் பாதிக்கப்பட்டோரை[illegible] கண்டுபிடித்து உதவுவதும், தடுப்[illegible] ஊசித் திட்டத்தில் மக்கள் அதிக[illegible] பங்குகொள்ளத் தூண்டுவதுமே இதன் நோக்கமாகும்.

சென்ற டிசம்பர் மாதம் முடிய 18.04 கோடி பேருக்குத் தடுப்பு ஊசிகள் முதல் முறையாகவும், 13.95 கோடி பேருக்குத் தடுப்பு ஊசிகள் இரண்டாவது முறையாகவும் போடப்பட்டன.

தேசிய வைசூரி நோய் ஒழிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக 1972-ல் ஜூலை மாதம் வரையில் 1.25 கோடி பேருக்கு முதல் தடவையாகவும், 4.29 கோடி மக்களுக்கு இரண்டாவது முறையாகவும் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன.

வைசூரி நோய் பரவுவதை இயன்றவரை விரைவிலேயே தடுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1971-ல் 16,187 பேர் இந்த நோயால் பீடிக்கப்பட்டனர்; அவர்[illegible]ில் 2,709 பேர் இறந்துபோயி[illegible].

[illegible]67-ம் ஆண்டில் சுமார் 83,943 பே[illegible] இந்நோயினால் அவதிப்பட்ட[illegible]; அவர்களில் மரணமடைந்தோ[illegible] எண்ணிக்கை 26,225

ந்ன்றிகெட்ட மதியழகன் துரோகம்

தமிழ் இனத்தையே காட்டிக் கொடுக்கத் துணிந்துவிட்டார்

தந்தை பெரியார் கண்டனம் -- தமிழ் மக்களுக்கு வேண்டுகோள்

சென்னை, நவ 17—

"இன்றையத் தினம் இழிதன்மையில் நீண்ட காலமாக அழுத்தப்பட்டுக் கிடந்த தமிழர் சமுதாயமாகிய நாம், யாராலும் எதிர்பார்க்க முடியாத--சாதிக்க முடியாத அளவு முன்னேறி வந்திருக்கிறோம்; இது இந்தியாவில் எங்கும் இல்லாத அளவுக்கு நாம் அடைந்த வெற்றியாகும்.

"இப்படிப்பட்ட ஒரு நல்வாய்ப்பு நிலைமையை ஒழிக்க எதிரிகளுக்குக் கையாட்களாக ஆகி, 'நம்மவர்கள்' என்று சொல்லப்படுபவர்கள் கேடு செய்கிறார்கள் என்றால், நமது சமுதாயத்திற்கே இது இழிநிலை என்றுதான் சொல்ல வேண்டி வரும்.

"நம் நிலை இன்று நழுவ ஆரம்பித்தால், மறுபடியும் மேல் நிலைக்குச் செல்வது என்றால் அது எளிதானது அல்ல!

"நமக்கு அதிகாரம் இல்லை; ஒற்றுமையோ கட்டுப்பாடோ இல்லை; பொதுநல உணர்ச்சியும் இல்லை; இன உணர்ச்சி என்கின்ற ஒரே சாதனத்தைக் கொண்டுதான் மானமும் அறிவும் உள்ள மக்களாக ஆக வேண்டியவர்களாக இருக்கின்றோம்; எனவே சிந்தியுங்கள்--ஆழ்ந்து சிந்தியுங்கள்"

என்று தந்தை பெரியார் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையொன்றில் கேட்டுக்கொண்டிருக்கிறார். அந்த அறிக்கை வருமாறு:—

'அவைத் தலைவர்மீது நம்பிக்கை என்று 234 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட அவையில் 178 பேர் கையெழுத்திட்டு (நம்பிக்கையில்லா)க் கடிதம் கொடுத்திருக்கிறார்கள்.

அதற்கு முன்பு சட்டப்படி உள்ள 14 நாள் அவகாச நோட்டீசுடன் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் அனுப்பிய தீர்மானத்தைச் சட்டரீதிவாகம் பதிவு செய்து கொண்டும், சட்டமன்றம் கூடடப்பட்டு, முதல் சேதியாக, 'என்மீது வந்திருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றிய விவாதம் நாளை நடத்தப்படும்' என்று அவையில் சபாநாயகரே தெரிவித்து வாக்களித்த பின்பும், சபாநாயகர் அந்தப்படி நடக்காமல் திடீரென்று 'சட்டமன்றத்தை டிசம்பர் 5ந் தேதிக்கு ஒத்திவைத்துவிட்டேன்' என்று கூறிவிட்டு எழுந்து போய்விட்டார்; இதன் காரணம் என்னவாக இருக்க முடியும்?

'நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்துக்கு வந்தால் பலமான மெஜாரிட்டியில் நிறைவேறி விடும்; நிறைவேறியவுடன் தனது பதவி போய்விடும்; போய்விட்டால் தனக்குக் கிடைத்துவரும் அந்தஸ்தும் -- மாதம் ரூ. 1,000 சம்பளமும் -- ரூ. 500 அலவன்சும் -- சலுகைகளும் -- மற்ற பெருமைகளும் ஒழிந்து, தான் ஒரு சாதாரண மனிதராகவும், தண்டிக்கப்பட்ட குற்றவாளி மனிதனாகவும் ஆகிவிட நேரிடுமே' என்கின்ற சுயநல பயத்தைவிட வேறு என்னவாக இருக்க முடியும்.

ஏற்கனவே, பொதுமக்களால் பவித ஒழுங்கு தவறான--நாணயக் கேடான பல குற்றஞ்சாட்டுக்களால் அமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டியதாகி -- விலக்கப்பட்டு இருந்தவர்!

எம்.ஜி.ஆர். மற்றும் பலருடைய சிபாரிசு -- வேண்டுகோள்களை வைத்து இப்போது அமைச்சர் பதவிக்கு அதிதீவிரமாக முயற்சி செய்து அதில் தோல்வியடைந்ததினால், அதற்குப் பதிலாக -- அதாவது எம்.ஜி.ஆருக்கு நன்றி காட்டவேண்டி அவர் நடந்து கொண்ட நடவடிக்கையால் தி. மு. கழகத்தால் நீக்கப்பட வேண்டியவராகிவிட்டார்!

இதன் பயனாக அவரது நிலை ஒரு சாதாரண மனிதர் நிலைக்கு வந்து விட்டதுடன், அவர்தம் வாழ்நாள் முழுவதும் ஒரு குற்றவாளியாகவே இருக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகிவிட்டார்; இது, மிகமிகப் பரிதாபத்திற்குரிய காரியமாகும்.

மதியழகன் புத்திசாலியாய் இருந்தால் -- தனக்குத் தயவால் கொடுக்கப்பட்ட சபாநாயகர் பதவியோடு நன்றியறிதலுடன் திருப்தியடைந்து நடந்து வருவாரேயானால், $3\frac{1}{2}$ ஆண்டு பொறுத்துவரும் தேர்தலிலும் வெற்றிபெற்றுத் திரும்பவும் மந்திரியாகவோ -- சபாநாயகராகவோ இருந்து வரக்கூடியவராவார். இப்போது பதவி போனதல்லாமல், மரியாதையும் போகும்படியான தன்மைக்கு வந்து விட்டார்!

சம்பளம் போனதோ, வருவாய் இல்லாமல்போனதோ அவருக்கு அலட்சியப்படவேண்டிய நிலையில், அவசியம் இல்லாமல் இருந்தாலும், ஓர் உயர் பதவியும் -- பெருமையும் -- மரியாதையும் போய், பொது மக்களிடையில்,

'நன்றியற்றவர்' என்கின்ற பெயரையும் அடையவேண்டி ஏற்பட்டு விட்டதனால் இது பெரிதும் பரிதாபப்படவேண்டிய காரியம் என்றே கருதுகிறேன்.

மதியழகன் -- எம்.ஜி.ஆர். ஆகிய இருவரும் ஒன்று சேர்ந்து, எப்படியாவது கலைஞர் அமைச்சரவையை ஒழிக்க 'வேண்டும்' ... தி. மு. கழக ஆட்சியையே ஒழிக்க வேண்டும்' என்கிற நிலைக்கு வந்து விட்டார்கள்!

இவர்கள் யார் -- தி. மு. கழகத்தால் மனிதர்களாகி விளம்பரம் பெற்று, செல்வம் -- மரியாதை -- அந்தஸ்து பெற்ற மனிதர்களாவர்!

இவர்களது இன்றைய முயற்சியின் பயன் என்ன ஆகும்? தமிழர் ஆட்சியை தமிழர் அல்லாதாரிடம் -- தமிழர் உணர்ச்சி இல்லாதவர்களுக்குப் போகும்படி செய்து, தமிழர் இனத்திற்குப் பெருங்கேட்டை உண்டாக்கும்படி செய்யக்கூடிய காரியத்திற்கு முயற்சிக்கின்றார்கள்; இவர்களைத் தமிழர் என்று சொல்ல முடியுமா? 'தமிழ் இனத்தைப் பற்றிக் கவலை கொண்டவர் என்றுவது சொல்ல முடியுமா?

எனவே, தமிழ் மக்களே -- திராவிடத் தமிழ் மக்களே -- நீங்கள் உங்களின் சமுதாய நிலைமையையும், நல்ல எண்ணத்தையும் கொண்டு சிந்தித்துப் பார்த்து அசல் தமிழர்களாக நடந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்."

மனச்சாட்சியை விற்ற மனோகரன்

மக்களவையில் கழகத்தின்மீது வீண்பழி சுமத்த முயற்சி

குற்றச்சாட்டுகளுக்கு உடனுக்குடன் கழக உறுப்பினர்கள் மறுப்புக் குரல்

புதுடில்லி, நவ. 17—

தி. மு. கழகத்துக்கும் முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும் விசுவாசமாக உள்ள 'காலி'கள், மீனம்பாக்கம் விமானநிலையத்தில் போலீசாரின் ஒத்துழைப்புடன் தம்மைத் தாக்கி ஒழிக்க முயன்றதாக மனோகரன், மக்களவையில் உரிமைப் பிரச்சினை கொண்டு வந்து பேசியபோது கழக உறுப்பினர்கள் அவரை இடைமறித்தனர்.

இந்திரா காங்கிரசு உறுப்பினர்கள் மனோகரனுக்கு ஆதரவாகவும் -- தி. மு. கழக உறுப்பினர்களுக்கு எதிராகவும் குரல் கொடுத்தனர்; என்றாலும் கழக உறுப்பினர்கள், மனோகரன் கூறிய குற்றச்சாட்டுகளுக்கு -- உடனுக்குடன் இடைமறித்துப் பதிலளித்தனர்.

"மனோகரன் கூறிய சிலவற்றை அவையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அகற்ற வேண்டும்' என்று கழக உறுப்பினர்கள் கோ. விசுவநாதன்--சி. டி. தண்டபாணி ஆகியோர் வற்புறுத்தினர்.

ஒரு கட்டத்தில், மனோகரனை வர்ணிக்கத் தோழர் விசுவநாதன் பயன்படுத்திய உவமைச் சொற்றொடர், அவையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது; 'மனோகரன் மனச்சாட்சியை விற்றவர்; கட்சிவிட்டுக் கட்சி தாவியவர்' என்று விசுவநாதன் குற்றஞ் சாட்டினர்.

குறிப்பாகத் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களைப் பற்றி மனோகரன் சொன்னவற்றை கழக உறுப்பினர்கள் ஆட்சேபித்தனர்.

தமிழக முதலமைச்சரைப் பற்றிப் பேசுவதைத் தவிர்க்குமாறு மனோகரனுக்கு அவைத் தலைவர் அறிவுரை கூறினர்.

மனோகரன் கூறியதை வைத்துக் கொண்டு உரிமைக் குழுவிற்கு உடனே இதனை அனுப்பிவிடாமல முதலில் தமிழக அரசினரைக் கேட்டு அறிந்திடவேண்டுமென்ற கருத்தை பிராங் அந்தோணி மகமத ஷமீம் போன்ற உறுப்பினர்களும், பிலு மோடி (சுதந்திரா) போன்றோரும் முன்வைத்தனர்.

முன்பு ஒருமுறை தங்கள் கட்சி உறுப்பினரால் கொண்டுவரப்பட்ட உரிமைப் பிரச்சினையின்மீது தகவல் அளிக்குமாறு மாநில அரசு ஒன்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என்பதை மார்க்சிஸ்டு கட்சியினர் அவைத் தலைவரின் நினைவுக்குக் கொண்டு வந்தனர்; 'ஒரு சீரான விதி எல்லா நிலைகளிலும் கடைபிடிக்கப்பட வேண்டும்' என்று அவர்கள் வற்புறுத்தினர்.

"தமிழகத்தில் கழக அரசின் இலஞ்ச ஊழலை எதிர்த்துப் போராட்டம்" என்று மனோகரன் பேசியபோது கழக உறுப்பினர்கள் 'ஓகோ' எனச் சிரித்து விட்டனர்!

மனோகரன் பயணம் செய்த அதே விமானத்தில் சென்னையிலிருந்து பயணம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. ஆர். கிருஷ்ணன் தாம் ஒன்றைக் கூற விரும்புவதாகக் குறிப்பிட்டுப் பேச முயன்றார்; ஆனால் அவர் பேச அனுமதிக்கப்படவில்லை.

மனோகரன் கொண்டுவந்த உரிமைப் பிரச்னைத் தீர்மானத்தின்மீது என்ன செய்வதென்பதில் அவை உறுப்பினர்களிடையே ஒருமித்த கருத்து இல்லாமையாலும் -- மனோகரன் கொடுத்த அத்தீர்மானத்தில் பிழைகளைக் கண்டதாலும் தீர்மானத்தின் மீது முடிவு எடுப்பதை மறுநாளுக்குத் தள்ளி வைப்பதாக அவைத் தலைவர் அறிவித்தார்.

பாவம்--இராசரத்தின நாயக்கர்!

சென்னை மேயர் தேர்தலில், தி. மு. க. வேட்பாளரை எதிர்த்தும் போட்டியிடப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ள இராசரத்தின நாயகரை ஆதரிக்க சுதந்தராக் கட்சி முடிவு செய்துள்ளதாம்; 'மற்றக் கட்சிகளும் ஆதரிக்க வேண்டும்' என்று எச். வி. ஹண்டே அறிக்கை விடுத்திருக்கிறார்.

பாவம் -- இராசரத்தின நாயக்கர்! அவரை நினைத்தாலே பரிதாபமாக இருக்கிறது! நல்ல மனிதர் -- அவருக்கு ஏன்தான் இந்தத் தேர்தல் ஆசையோ!

சட்டமன்றத் தேர்தல் முதல் நாடாளுமன்றத் தேர்தல் வரை இவர் போட்டியிடாத பொதுத் தேர்தல் இல்லையென்றே சொல்லாம்! அதற்காக அவர் செலவிட்ட பணம் கொஞ்சமா நஞ்சமா?

மாநகராட்சி உறுப்பினர் பதவி ஒன்றைத் தவிர அவர் இதுவரை கண்ட பலன் எதுவுமில்லை.

அவசரத் தேர்தலில் நிறுத்திவைத்தால் பலருக்கு அதனால் 'பலன்' உண்டு; ஆகவே தான், எப்படியோ அவர் தேர்தல் புயலில் சிக்கிக் கொண்டுவிடுகிறார்!

மேயர் தேர்தலில் இப்போதுதான் அவர் முதன் முதலாகப் போட்டியிடுகிறார் என்று சொல்ல முடியாது; முன்பு ஒருமுறை இதே இராசரத்தின நாயக்கரை மேயர் தேர்தலில் நிறுத்தி வைத்துக் காங்கிரசுக்காரர்கள் ஆடிய ஆட்டம் -- அடேயப்பா -- இப்போது நினைத்தாலும் சிரிப்பு வருகிறது! அதையெல்லாம் நினைவு படுத்துவது சரியல்லதான் -- பாவம் -- வேதனைப் படுவார் திருவாளர் நாயக்கர்!

ஒருமுறை இவர்களிடம் மாட்டிக்கொண்டு அதனால் பட்டபாடு -- ஏற்பட்ட செலவு -- கிடைத்த தோல்வி போதாதா?

உண்மையிலேயே வெற்றி பெற்றுவிட முடியும் என்றால், அதில் போட்டியிடச் சிண்டிகேட் காங்கிரசிலோ -- இந்திரா கட்சியிலோ -- சுதந்திராவிலோ ஆட்களா இல்லை? இராசரத்தின நாயக்கரையா தேடிக்கொண்டு வருவார்கள்? இதெல்லாம் அந்த நாயக்கருக்குப் புரியவேண்டாமா?

மற்றவர்களிடம் இல்லாத திறமை இவரிடம் இருக்கிறது என்பதாலா இவரைப் பிடித்து நிறுத்தி வைக்கிறார்கள்?

மேயர் தேர்தலில் பலப் பரீட்சை நடத்த வேண்டுமானால், அதற்கு மட்டும் இராசரத்தின நாயக்கரை நாடும் மர்மம் என்ன?

இராசரத்தின நாயக்கரின் வெற்றியல்ல அவர்களுக்கு முக்கியம்; அவர் வெற்றி பெற்றாலும் தோல்வியுற்றாலும், 'நல்ல அறுவடை' நடக்க வேண்டும்--அதுதான் அவர்களின் தலையாய இலட்சியம்! வெறும 'அன்னக்காவடி' ஒருவரை மேயர் தேர்தலில் நிறுத்தினால் யாருக்கு என்ன இலாபம்?

இந்த உண்மை இராசரத்தின நாயக்கருக்கும் தெரியும்; இருந்தாலும் அவரையும் அறியாமல் ஒரு 'சபலம்'--'தப்பித்தவறியாவது நாம் வெற்றி பெறமாட்டோமோ' என்ற ஆசை!

'பணம் இன்று வரும் -- நாளை போகும் --- பதவி வருமா? வருகிற வாய்ப்பை ஏன் நழுவவிட வேண்டும்?" என்பதுதான் அவருடைய முடிவு!

மேயராக வரமுடியவில்லை என்றாலும், ஒரு நாளாவது பத்திரிகையில் பெயர் அடிபடட்டுமே! விளம்பரமாவது ஆகட்டுமே! அழியும் பணத்துக்கு இந்தப் பலனையாவது அவர் அடையட்டும்!

மா. செ.

கல்வி -- உள்ளாட்சித்துறை அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

நிகழ்ச்சிகள்

நவ. 18 காலை : திருச்சி; மாலை 4-மணி : புதுக்கோட்டை; 6 மணி: கீரனூர் -- பொதுமக்கள் வரவேற்பு; இரவு 8-மணி : திருச்சி— பொதுமக்கள் வரவேற்பு.

அறநிலைய அமைச்சர்

மு. கண்ணப்பன்

நிகழ்ச்சிகள்

நவ. 18 மாலை 5-மணி : திருமழிசை பட்டாபிராம் பாதை திறப்பு; 6-மணி : வெள்ளவேடு பள்ளிக் கட்டடம் -- விவசாயக் கிடங்கு திறப்பு; பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; இரவு 7-மணி : வெள்ளவேடு பொதுமக்கள் வரவேற்பு--பொதுக் கூட்டம்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சொன்ன இராஜாஜி, 1971-ல், 'காமராசர் வந்தாலதான் தர்மம் வாழும்' என்று சொல்லவில்லையா?

தி. மு. கழகத்தை அப்போது ஆதரித்த இராஜாஜி இப்போது எதிர்க்கவில்லையா?

இந்திய அரசியலில் இந்தப் பரபரப்பெல்லாம் திரைப்படம் ஓடுவதுபோல; சில படங்கள் 40--50 நாட்கள் ஓடும்; சில படங்கள் 100 நாட்கள் ஓடும்; எம். ஜி. ஆருக்குப் பல படங்கள் 100 நாட்கள் ஓடியிருக்கின்றன; இந்தப் படமும் 100 நாட்கள் ஓடி ஓய்ந்துவிடும்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அறிவகம் அச்சகத்தில் (94, ...) [illegible] இருந்து வெளியிடப்படுகிறது.